சென்னை தெற்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம் நேற்று (20.07.2025) மதுரவாயல் மேட்டுக்குப்பம் புஷ்பா கார்டனில் எஸ்.குணசேகரன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் மா சுப்பிரமணியன் ஆலோசனை வழங்கி உரையாற்றினார். மேலும் இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர்கள் காரம்பாக்கம் கணபதி, ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா மற்றும் க. தனசேகரன், மு.மகேஷ்குமார், பா. அருணாச்சலம், காசி. முத்துமாணிக்கம், தொகுதி பார்வையாளர்கள் பாண்டி செல்வம், உமாநாத் மாவட்ட கழக நிர்வாகிகள் பாலவாக்கம் த.விஸ்வநாதன், மு. மனோகரன், வாசுகி பாண்டியன், எஸ்.பாஸ்கரன், பகுதிச் செயலாளர்கள் நொளம்பூர் வே.ராஜன், இரா.துரைராஜ், துரை. கபிலன் சு.சேகர், மு.ராசா, கே.கண்ணன், எஸ்.வி.ரவிச்சந்திரன், வி.இ.மதியழகன் ஒன்றியச் செயலாளர்கள் துரை.வீரமணி, வெங்கடேசன், பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன், களக்காடி எல்லப்பன், மின்னல் கந்தப்பன், மேடவாக்கம் ப.ரவி, எஸ்.டி.தங்கராஜ், பி.எஸ். முருகேசன், எஸ்.ஏ.அரிகிருஷ்ணன், ஆர்.பாலசுந்தரம், அடையாறு பி.ஜே.பாஸ்கர், வா .செல்வகுமார் மற்றும் அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், ஒன்றிய கழக முக்கிய நிர்வாகிகள், பகுதி அணிகளின் அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

சென்னை கிழக்கு மாவட்ட - பகுதி - வட்டச் செயலாளர்கள் ஆலோசனைக்கூட்டம்:

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு சிறப்புரையாற்றினார்.

சென்னை, ஜூலை 21 -

சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட துறைமுகம், எழும்பூர், வில்லிவாக்கம், அம்பத்தூர் ஆகிய தொகுதிகளின் பகுதிக்கழச் செயலாளர்கள், வட்டகழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம், நேற்று (20-07-2025 ஞாயிற்றுக்கிழமை) காலை 10.30 மணியளவில் சென்னை, ஓட்டேரி, ஸ்டாரன்ஸ் சாலை, எம்.கே.டி.மஹாலில், அவைத்தலைவர் கோ.ஏகப்பன் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில், சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான பி.கே.சேகர்பாபு சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில் ஜோசப் சாமுவேல், கே.எஸ்.ரவிச்சந்திரன், ப.ரங்கநாதன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள்: பி.கே.மூர்த்தி, சி. மகேஷ்குமார், கே.எஸ்.எம். நாதன், பரிதிஇளம்சுருதி. மாவட்ட நிர்வாகிகள்: ஜி. எம். தேவன், புனிதவதி எத்திராசன், பகுதிக் கழக செயலாளர்கள்: செ.தமிழ்வேந்தன், கூ.பி.ஜெயின், வே.வாசு, டி.எஸ்.பி.ராஜகோபால், எம். டி.ஆர். நாகராஜ், சொ.வேலு. வி.சுதாகர், எஸ்.முரளி, எஸ். ராஜசேகர். தேர்தல் பார்வையாளர்கள்: இரா.நரேந்திரன் பி.முனியாண்டி, பி.எம். யாழினி. ஓ.ஏ.நாகலிங்கம். பொதுக்குழு உறுப்பினர்கள்: கோ.மணி, டி.வி.செம்மொழி, சாவித்திரி வீரராகவன், வி.ரமேஷ் (எ) நீலகண்டன், ஏ.பி.பூர்ணிமா, அ. நிர்மலா தேவி, எம்.இப்ராஹிம்கனி, ஆர்.கலைச்செல்வி,

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்: வானவில் விஜய், க.வினோத், எல்.பி. எப்.. மோகன், ஜி.தாமோதரன், எம்.பிரோஸ்கான், P.விஜயகுமார், இரா.வீரமணி, மா.அசோக்குமார், கு. கிருஷ்ணமூர்த்தி, கா.ராஜா முகம்மது, ஜி.பி. பிரதீப்குமார், எல்.சம்பத்குமார், எம்.விநாயகம், து.ஆயிரம், சுதாதீனதயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், டாக்டர். ஜி.சாந்தகுமாரி, ஜி.வி.நாகவள்ளி, மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள் ஆகியோர் பெருந்திரளாக கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் வட்டக் கழக செயலாளர் மா.ருத்ரமூர்த்தி நன்றி கூறினார்.

மு.க.முத்துவுக்கு இரங்கல்!

தீர்மானம் 1:

முத்தமிழறிஞர் கலைஞர் குடும்பத்தின் மூத்த பிள்ளையும், இளமைக்காலம் முதல் நாடகம் மற்றும் திரைத் துறையின் மூலமாக திராவிட இயக்கத்திற்கு தொண்டாற்றியவரும், கழகத் தலைவர் மீது மாறா பற்றும் அவரது வளர்ச்சியை தனது வளர்ச்சியாக கண்டு எப்பொழுதும் ஊக்கப்படுத்தியவருமான அண்ணன் மு.க.முத்து அவர்கள் வயது மூப்பு காரணமாக இயற்கை எய்தியதற்கும்,

எழும்பூர் வடக்கு பகுதி, 99 'ஆ' வட்டம், பி.எல்.ஏ2 வாகப் பணியாற்றிய தட்சிணாமூர்த்தி அவர்களுடைய மறைவிற்கும் இக்கூட்டம் ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்து ஆகியோரை இழந்து வாடும் அன்னார்களது குடும்பத்தினருக்கு ஆறுதலையும் தெரிவித்து இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

தீர்மானம் 2:

மதுரை மாநகரில் ஜூன் 1 அன்று நடைபெற்ற பொதுக் குழுவில் தமிழ்நாட்டின் மண் மொழி மானம் காக்க கழகத் தலைவரால் எடுக்கப்பட்ட சிறப்பு தீர்மானமான "ஓரணியில் தமிழ்நாடு" உறுப்பினர் சேர்க்கை பணிகளின் தொடர்ச்சியாக 17.7.2025 அன்று கழகத் தலைவர் தலைமையில் காணொலிக் காட்சி வழியாக நடைபெற்ற மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் தலைவர் கூறிய கருத்துக்களுக்கு இணங்க உறுப்பினர் சேர்க்கைப் பணியில் ஈடுபட்டு சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒவ்வொரு பாகத்திற்கும் வீடு வீடாக சென்று கழகத்தின் சாதனைகளை எடுத்துச் சொல்லி அவர்களை உறுப்பினர்களாக இணைத்து நிர்ணயிக்கப்பட்ட நாற்பது சதவிகிதம் (40%) இலக்கை வெகு விரைவில் பூர்த்தி செய்ய உறுதி ஏற்று இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

திரு.வி.க. மண்டலம் 73 - 75 வார்டுகளில்

ரூ.11. 77 கோடி மதிப்பில் பள்ளிக் கட்டிடம்!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு அடிக்கல் நாட்டினார்!

சென்னை, ஜூலை 21 -

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (19.07.2025) ரூபாய் 11.77 கோடி மதிப்பீட்டில் திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு 73 மற்றும் வார்டு 75ல் இரண்டு நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையக் கட்டடம், மற்றும் சென்னை உயர்நிலைப் பள்ளிக் கட்டடம் கட்டுவதற்கான பணிகளை அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்.

தேசிய நகர்ப்புற சுகாதார இயக்கம் மற்றும் மாநகராட்சி மூலதன நிதி ஆகியவற்றின் கீழ் திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு73, குக்ஸ் சாலை வாடியா நகர் பகுதியில் ரூபாய் 3.05 கோடி மதிப்பீட்டிலும், வார்டு75, நம் மாழ்வார் பேட்டை 2ஆவது தெரு பகுதியில் ரூபாய் 2.28 கோடி மதிப்பீட்டிலும் என இரண்டு நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையக் கட்டடத்திற்கான பணிகளை அமைச்சர் அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். இந்த நகர்ப்புற சுகாதர மையங்களில் அவசர அறை, மருத்துவ அலுவலர் அறை, மருந்தகம், ஊசிப் போடும் அறை, ஆய்வக அறை, ஆவண அறை, மருந்து இருப்பு அறை, மருந்துவ ஆலோசனை அறை, பதிவு அறை, பணியாளர்களின் அறை, ஆண்கள் பெண்கள் கழிவறை, காத்திருப்பு கூடம் உள்ளிட்ட வசதிகள் அமையவுள்ளன.

இதனை தொடர்ந்து, வார்டு 73, புளியந்தோப்பு அம்மையம்மாள் தெரு பகுதியில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபாய் 6.44 கோடி மதிப்பீட்டில் சென்னை உயர்நிலைப் பள்ளிக்கான கட்டுமானப் பணிகளை அமைச்சர் அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். இப்பள்ளிக் கட்டடம் 17,569 சதுர அடி பரப்பளவில் தரைத்தளம், முதல் தளம், இரண்டாம் தளத்துடன் கட்டபட்டவுள்ளது. இதில் 19 வகுப்பறைகள், தலைமையாசிரியர் அறை, இரண்டு ஆசிரியர் அறை, மேடை மற்றும் கழிப்பறை வசதிகளுடன் கட்டபடவுள்ளது.

இந்நிகழ்வுகளின்போது, மேயர் திருமதி ஆர். பிரியா, திரு.வி.க. நகர் சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, மத்திய வட்டார துணை ஆணையர் திரு.எச்.ஆர்.கௌஷிக், நிலைக்குழுத் தலைவர் (கல்வி) பாலவாக்கம் த. விசுவநாதன், மண்டலக் குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர் ச.அம்பேத்வள வன், மண்டல அலுவலர் (பொ) ஆர்.சரவணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தி.மு.க. இளைஞர் அணி துவக்கப்பட்டு 46 ஆம் ஆண்டு தினமான ஜூலை 20 அன்று தர்மபுரி கிழக்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் பா.ம.க., பி.ஜே.பி. உள்ளிட்ட மாற்றுக் கட்சியில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் பாஜக OBC அணி தலைவர் ராஜசேகர் ஏற்பாட்டில் தர்மபுரி கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர், நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ஆ.மணி ஏரியூர் ஒன்றிய கழக செயலாளர்கள் செல்வராஜ், மற்றும் கிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் தங்களை தி.மு.க.வில் இணைத்துக் கொண்டனர். நிகழ்வில் நகர செயலாளர் நாட்டான்.மாது,மாவட்ட நிர்வாகிகள் வே.தங்கமணி,ரேணுகாதேவி,ஒன்றிய செயலாளர்கள், ஐ.டி.விங் எம்.பி.கௌதம்,உதயசூரியன்,ஈஸ்வர்,உள்ளிட்ட தி.மு.க.வினர் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி நகரம் மா.பொ.சி சாலையில் அமைந்துள்ள பெருந்தலைவர் காமராசர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன், எம். எல். ஏ. மற்றும் திருத்தணி வட்டார நாடார் சங்கத்தினருடன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அதனைத் தொடர்ந்து திருத்தணி வட்டார நாடார் சங்கத்தினர் ஏற்பாட்டில் பெருந்தலைவர் காமராசர் அவர்களின் கல்வி வளர்ச்சி நாள் விழாவில் சிறப்புரையாற்றினார். உடன் நகர துணைச் செயலாளர் ஜி. எஸ். கணேசன், கே. எஸ். அசோக் குமார், திருத்தணி நாடார் சங்க நிர்வாகிகள் ஆர். எஸ்.பிரேம்குமார், சுப்பிரமணி, முத்து மாரியப்பன், உள்பட கழக நிர்வாகிகள் நாடார் சங்க நிர்வாகிகள் உள்ளனர்

தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, முடிச்சூர் வரதராஜபுரம் வட்டார நாடார் ஐக்கிய சங்கத்தின் 5,ஆம் ஆண்டு விழாவில் பால்வளத்துறை அமைச்சர் டி.மனோ தங்கராஜ் பங்கேற்று வாழ்த்துரை ஆற்றினார். நிகழ்ச்சியில் தாம்பரம் மாநகர செயலாளர்,எஸ். ஆர்.ராஜா.எம்.எல்.ஏ. உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

கட்பீஸ் ப.சோமசுந்தரமூர்த்தி தலைமை ! ஐட்ரீம் ஆர்.மூர்த்தி - ஜே.ஜே.எபினேசர் முன்னிலை !

இராயபுரம் முன்னாள் பகுதி செயலாளர் கட்பீஸ் அ.பழனி 6ஆம் ஆண்டு நினைவு நாள் ! நலஉதவிகள் !

அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் - ஆர்.டி.சேகர் - கலாநிதி வீராசாமி - எஸ்.ஜோயல் வழங்குகின்றனர் !

சென்னை, ஜூலை21

சென்னை வடக்கு மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில் இராயபுரம் பகுதி முன்னாள் செயலாளர் கட்பீஸ் அ.பழனி அவர்களின் 6ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வு இன்று (21.07.25 திங்கட்கிழமை) மாலை 4.00 மணியளவில் பாலு தெரு, பழைய வண்ணாரப்பேட்டை, செ21ல் நடைபெறுகிறது.

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கட்பீஸ் ப.சோமசுந்தரமூர்த்தி தலைமை வகிக்கிறார். ஐட்ரீம்.ஆர்.மூர்த்தி எம்.எல்.ஏ, ஜே.ஜே.எபினேசர்.எம்.எல்.ஏ, ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

பகுதி செயலாளர்கள்: இரா.செந்தில்குமார், வ. பெ.சுரேஷ், க.ஜெயராமன், அ.முருகன், இரா.லட்சுமணன், எஸ்.ஜெபதாஸ்பாண்டியன், லயோலா.கே.மதன், இர.பொன்இளவரசன், வை.கௌதமன், இ. ரவிகுமார், க.கலைச்செல்வன், ஆகியோர் வரவேற்கின்றனர்.

இதில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர், மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, டாக்டர்.கலாநிதி வீராசாமி எம்.பி, தூத்துக்குடி.எஸ். ஜோயல், ஆகியோர் நலத்திட்ட உதவிகள் வழங்குகின்றனர்.

தா.இளைய அருணா எம்.சி, இரா.மதிவாணன், பி.டி. பாண்டிசெல்வம், ந.மனோகரன், இரா.கருணாநிதி, என். மருதுகணேஷ், இரா.நரேந்திரன், ஆர்.வெற்றிவீரன், எஸ். ஆர்.கமலகண்ணன், மு. கோபி, க.நாகம்மை, வி.தயாளன், நேதாஜி.யு.கணேசன், வே.சிவக்குமார், இராயபுரம். சு.சேகர், நா.சண்முகம், கி. ராஜேந்திரன், பா.மதிவாணன், ஏ.தமிழ்செல்வன், க. அமுலு, சிவாஜி கிருஷ்ண மூர்த்தி, வண்ணை புகாரி, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்: வெ.சு.சத்தியநாராயணன், ஏ.டி.மணி, லயன். எம்.தீனதயாளன், லியோ.டி.சுரேஷ், கார்த்திக் செங்குட்டுவன், லட்சுமி வேலு, விமலாமோகன், பி. செந்தில்குமார், டாக்டர். வை.கலைவாணன், எஸ்.எம். பரசுராமன், வி.வி.ரமேஷ், சி. மணிகண்டன், ரெயின்போ. என்.விஜயகுமார், க.கோவிந்த சாமி, ஜெ.கே.நாதன், பி. சதீஷ்குமார்,

மாமன்ற உறுப்பினர்கள்: பா.வேளாங்கன்னி, விஜய லட்சுமி விஜயகுமார், கீதா சுரேஷ், பகுதி நிர்வாகிகள்: த.ஜெயபாலன், பி.சேகர், கு.சுந்தர், பி.ஜெயலட்சுமி, லோ.மோகன், எம்.கே.இஸ்மாயில், கு.ரமேஷ், சு.திருஞானம், வே.மலையம்மாள், இ.மதன், என்.அனிபா ஆர். டி.ராஜா, கே.பாலு, கே.பி. சதீஷ்குமார், எம்.வேதலட்சுமி, மாஸ்.டி.வெங்கடேசன், எம்.கோவிந்தராஜ், எம்.லோகநாதன், தா.திராவிடசெல்வி, பி.சீனிவாசன், எஸ்.பி.எஸ். புத்தன், நெல்லை.எம்.எம். சாமி, எரிமலைபாலு, பொன். லட்சுமி சிவகுரு, என்.ஏழுமலை, எஸ்.ராதாகிருஷ்ணன், ஏ.வேணுகோபால்,

வட்ட செயலாளர்கள்: ஜி.சதீஸ்குமார், ஆர். வி.கணேஷ், என்.கிருஷ்ணன், க.கோவிந்தராஜ், பி.கண்ணன், இரா.பாலன், எம்.எல். ரவி, எஸ்.புகழேந்தி, கொரியர்.பி.முருகன், பாலா லட்சுமணன், ஜெ.கௌரீஸ்வரன், தா.வ.மு.கஜேந்திரன், என். எம்.கதிரேசன், மா.நாகராசன், நா.கோதண்டன், ப.குமார், ச.தமிழ்செல்வன், பொ.து.ராஜா, ஜெ.பிரேம்ஆனந்த், எஸ்.எல்.சுந்தர், கி. தேவன், ஆர்.ஏ.எம்.சசிகுமார், ஜி.ஏழுமலை, ஆர்.ராஜன்,

மாவட்ட பிரதிநிதிகள்: எல்.சீனிவாசன், வி.குமார், அத்தோ.பி.முனுசாமி, எஸ். சுரேஷ், ஐசிஎப்.பழனி, நா. பாரி, எஸ்.யுவராஜ், இரா. பொன்முடி, ந.குமார், எம். பாலாஜி, ஆர்.டி.ஜெய்சங்கர், எஸ்.முகமதுமொய்தீன், எம். பாலசுப்பிரமணியன், ஏ.அன்வர், பி.கே.மூர்த்தி, மா.ரூபசங்கர், ஜெ.சுரேஷ்பாபு, சா. திருப்பதிசாமி, எஸ்.சொக்கலிங்கம், ஜி.முகுந்தன், ஜி. ராஜா, டி.சங்கர், கே.ஜானகிராமன், எஸ்.ஜான்கென்னடி, பா.வேதாச்சலம், எம்.இ. சாகுல்அமீது, ப.ஆ.சண்முகம், டாக்டர். ஆர். பாண்டியராஜன், கே.என்.பார்த்திபன், எம்.டி.மதன்ராஜ், மு.சாகுல்மீரான், மோ.ரவிகுமார், சு.சசிதரன், ந.ம.மகேஷ்குமார், சி.லிங்கேசன், சி.மனோகரன், எஸ்.குமார், எஸ்.கே. இளங்கோ, எஸ்.கே.சந்திர பொம்மு, ஆர்.பரந்தாமன், டி.கருணாகரண், யு.அனிபா, கோ.ஹரிராமன், டி.ஜனார்த்தனன், ஜெ.ஜான்நெல்சன், எஸ்.மணிகண்டன், எஸ். அசோக், எல்.கிருஷ்ணஹரி ஹரன், பா.கதிரவன், டி. லெனின், எம்.டில்லிபாபு, சீமென்.கே.ரங்கராஜ், ஆ. ஆனந்தன், கோ.ஹரிஷ்குமார், ஜெ.வசந்தகுமார், வி.கே. ராஜ், பி.பிரபாகரன், ஒலி ஒளி ஆ.பாபு, ர.இம்ரான், கே.சிவ தனுஷ், எம்.எம்.சந்துரு, த. ரவி, பி.எஸ்.வெங்கடேசன், எஸ். கே. செந்தில்குமார், சுவீஸ். ஆர். இளையராஜா, எஸ்.குமரன், சி.தமீம்அன்சாரி, அத்ரிபேகம், ஜெயா வினோர்ரீதர், பி.சுரேகா, ஏ.குமார், எம்.சௌந்தரபாண்டியன், ஏ.ஜீலியன், ப.ஆனந்தகுமார், எஸ்.எஸ்.சங்கர், ஆர். தங்கராஜ், கே.சி.பிரதாபன், என்.முத்துகுமார், எம்.பழனி, எம்.வி.நரசுமணி, ஏ.குமார், கட்பீஸ்.எல்.ராஜீ, ஏ.கதிரவன், பி.சுதாகர், கே.கைலாசம், எஸ்.ராஜசேகர், ஆர்.பாரதிதாசன், ஏ.ஞானசேகர், இராயபுரம் ராஜ், ஜே.சந்துரு, ஆ.மணிவண்ணன், ஜி.உமாபதி, பீ.சத்தியநாராயணன், வி.சரவணன், ஜி.சம்பத், ஏ.சந்திரசேகர், ஆ.ரமேஷ், பீ. ஞானம், துரைநாராயணன், ஜி.பிரபு, ஜி.பாலா, எஸ். பரணி, நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள்: பி.ர விசங்கர், நாட்டாமை.கே.லட்சுமணன், எம்.என்.வெங்கட், மோ.ரவிகுமார், சு.சசிதரன், மூ.வினோத்குமார், எஸ். பொன்னரசன், இரா.நரேஷ், என்.சுனில்குமார், ம.அருண் பிரபாகரன், கா.சீனிவாசன், பி.விஷால்ஆனந்த், வ.மொய்தீன், கு.கௌரிநாதன், அ.சந்திரசேகர், ஜி.கோதண்டராமன், ஏ.கதிரவன், வி.பிரேம்குமார், கொரியர்.எம்.முருகன், த.கு. பன்னீர்செல்வம், பா.சுதாகர், க.பாலகிருஷ்ணன், கா.ரீதர், எம்.தங்கராஜ், மற்றும் பலர் கலந்து கொள்கிறார்கள்.

என்.அப்துல்மாலிக், அ. சாந்தாகுமார், ஆகியோர் நன்றி கூறுகிறார்கள்.

எழும்பூர் தொகுதி: சேத்துப்பட்டு பகுதி வாழ் மக்களின்

இருபதாண்டு கோரிக்கைக்கு விடிவு!

இ.பரந்தாமன், எம்.எல்.ஏ., ஆணையர் ஜெ.குமரகுருபரன் ஆய்வு

சென்னை, ஜூலை 21 -

எழும்பூர் தொகுதி, வார்டு எண்.108, சேத்துப்பட்டு டாக்டர் குருசாமி ரயில்வே மேம்பாலத்திற்கு தென்மேற்குப் பகுதியில் அமைந்துள்ள மெக்நிக்கல்ஸ் சாலை மற்றும் அதனையொட்டியுள்ள பகுதிகளையும் அம்மேம்பாலத்தின் தென்கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள சேத்துப்பட்டு புறநகர் ரயில் நிலையத்தையும் இணைக்கும் வகையில் அம்மேம்பாலத்திற்குக் கீழே நடைபாதை அமைப்பது தொடர்பாக, தி.மு.கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ. பரந்தாமன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுரு பரன், மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியின் பாலங்கள் துறையைச் சேர்ந்த கண்காணிப்புப் பொறியாளர் ஆகியோர் இணைந்து ஆய்வு மேற்கொண்டனர்.

2002ஆம் ஆண்டுக்கு முன்பு வரையில் டாக்டர் குருசாமி மேம்பாலத்தின் தென்மேற்குப் பகுதியையும், அம்மேம்பாலத்தின் தென்கிழக்கே அமைந்துள்ள சேத்துப்பட்டு ரயில் நிலையத்தையும் இணைக்கும் வகையில் அம்மேம்பாலத்தின் கீழ்ப்பகுதியில் நடைபாதை ஒன்று அமைந்திருந்தது. சேத்துப்பட்டு பகுதி வாழ் மக்கள் மட்டுமின்றி, அப்பகுதியில் அமைந்துள்ள ஐந்து பள்ளிகளின் மாணவர்கள், மாணவர்களது பெற்றோர், அலுவலகம் செல்வோர் ஆகியோர் அனைவரும் சேத்துப்பட்டு புறநகர் ரயில் நிலையம் வந்து செல்வதற்கு, மேம்பாலத்தின் மீது ஏறி இறங்குவதற்குப் பதிலாக இந்த நடைபாதையைத்தான் பயன்படுத்தி வந்தனர். இந்த நடைபாதை ரயில் நிலையத்தைச் சிரமமின்றி அடைவதற்கு ஏதுவாகவும், அதேசமயம் பாதுகாப்பானதாகவும் இருந்து வந்தது.

தென்னக ரயில்வே 2002 ஆம் ஆண்டில் பொதுமக்கள் பயன்படுத்தி வந்த இந்தப் பாதையில் ஒரு புதிய இருப்புப் பாதை அமைத்த பின், பொதுமக்கள் இந்த நடைபாதையைப் பயன்படுத்த முடியாத நிலைமை உருவானது. மேலும், சேத்துப்பட்டுப் புறநகர் ரயில் நிலையத்தை அடைவதற்கு டாக்டர் குருசாமி மேம்பாலத்தின் மீது ஏறி, இறங்கி, போக்குவரத்து நெரிசலைக் கடந்து செல்வதைத் தவிர வேறு மாற்றுப் பாதை இல்லாத நிலை ஏற்பட்டது.

அப்பாலத்தையொட்டி அமைந்துள்ள ஐந்து பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களும், அவர்களது பெற்றோரும் மற்றும் வயதானவ ர்களும் குருசாமி மேம்பாலத்தின் மீது ஏறி, அதன் பின் போக்குவரத்து நெரிசலைக் கடந்து, பாலத்திலிருந்து கீழே இறங்கி சேத்துப்பட்டு புறநகர் ரயில் நிலையத்திற்குச் செல்வது சிரமம் தருவதாகவும், பாதுகாப்பற்றதாகவும் இருப்பதாகக் கருதி வந்தனர். இப்பாதுகாப்பற்றதன்மை காரணமாக, குருசாமி மேம்பாலத்தின் கீழே சேத்துப்பட்டு புறநகர் ரயில் நிலையத்திற்கு வந்து செல்வதற்கு ஏற்ப பாதுகாப்பான மாற்றுப் பாதை அமைத்துத் தர வேண்டும் என சேத்துப்பட்டு பகுதி வாழ் மக்களும் அப்பகுதியைச் சேர்ந்த பள்ளி மாணவர்களின் பெற்றோர்களும் பள்ளி நிர்வாகிகளும் கோரி வந்தனர்.

எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் இ.பரந்தாமன், தனது தொகுதியைச் சேர்ந்த பொதுமக்களின் இக்கோரிக்கையை பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் மற்றும் பாலங்கள் துறை அதிகாரிகளிடம் எடுத்துக் கூறி, இக்கோரிக்கையை நிறைவேற்றிட தொடர் முயற்சிகள் எடுத்ததைத் தொடர்ந்து, டாக்டர் குருசாமி பாலத்தின் கீழ்ப் பகுதியில் ஒரு பாதுகாப்பான நடைபாதை அமைப்பது தொடர்பான ஆய்வு 19.07.2025 அன்று மேற்கொள்ளப்பட்டது.

" இ.பரந்தாமன் அவர்களின் முயற்சியால், தங்களின் இருபதாண்டு கோரிக்கைக்கு ஒரு விடிவு கிடைத்திருப்பதாக" சேத்துப்பட்டு பகுதி வாழ் மக்களும், அம்மேம்பாலத்தையொட்டி அமைந்துள்ள பள்ளி ஆசிரியர்களும், மாணவர்களின் பெற்றோர்களும் இவ்வாய்வு தொடர்பாக தங்களது மகிழ்ச்சியைத் தெரிவித்துள்ளனர்.

எழும்பூர் தொகுதி: சேத்துப்பட்டு பகுதி வாழ் மக்களின் இருபதாண்டு கோரிக்கைக்கு விடிவு இ.பரந்தாமன், எம்.எல்.ஏ., ஜெ.குமரகுருபரன், ஐ.ஏ.எஸ். இணைந்து டாக்டர் குருசாமி மேம்பாலத்தின் கீழே நடைபாதை அமைப்பது தொடர்பாக ஆய்வு மேற்கொண்டனர்.